இந்திய உச்ச நீதிமன்றம்

2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 07 ஆம் நாள்

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் திரு. நாகேஸ்வர ராவ் மற்றும் ஹேமந்த் குப்தா

குற்றவியல் மேல்முறையீடு எண். 1042/2012

தண்டனை சட்டம் 1860- பிரிவு 304- பி - வரதட்சணையால் இறப்பு - அ .சா.3 ஆக இல்லாதபோது, இறந்தவரின் தந்தை, 26.05.1991 அன்று, மேல்முறையீட்டாளர் தனது மகளை திருமணம் செய்ததாக கூறினார் - திருமணம் முடிந்த உடனேயே, வரதட்சணை கேட்டு மேல்முறையீடு செய்தவர், மாமனார், மாமியார் மற்றும் நாத்தனார் ஆகியோரால் அவள் மோசமாக நடத்தப்பட்டாள். அ .சா.3 இன் படி, 08.02.94 அன்று, அவர் தனது மகள் மருத்துவமனையில் காலமானார் என்ற தகவலைப் பெற்றார், மேலும் குற்றம் சாட்டப்பட்ட நபர் விஷம் கொடுத்ததால் அது நிகழ்ந்ததாக அவர் குற்றம் சாட்டினார். அரசுத் தரப்பு, மேல்முறையீட்டாளர் மற்றும் இறந்தவரின் மாமியார் ஆகியோருக்கு எதிராக மட்டுமே தனது வழக்கை நிரூபித்ததாக விசாரணை நீதிமன்றம் முடிவு செய்தது, அதேசமயம் குற்றம் சாட்டப்பட்ட மாமனார் மற்றும் நாத்தனாரைப் பொறுத்தவரை, குறிப்பிட்ட பங்கு எதுவும் இல்லை என்பதால், அவர்கள் விடுவிக்கப்பட்டனர் . உயர் நீதிமன்றம், நிரபராதி என்ற எண்ணதில் , மாமியாரின் மேல்முறையீட்டை அனுமதித்து அவரை விடுதலை செய்தது, அதேசமயம் மேல்முறையீட்டாளரின் தண்டனை ஏழு ஆண்டுகளாக குறைக்கப்பட்டது.

மேல்முறையீட்டின் முடிவு:

அரசுத் தரப்பு, கீழமை நீதிமன்றங்களால் தண்டிக்கப்பட்டதற்கு அடிப்படையாக அமைந்த அ.சா.3 மற்றும் இறந்தவரின் சகோதரரான அ .சா.4 இன் வாக்குமூலத்தை நம்பியிருந்தது. இருப்பினும்,

இறந்தவர் இறப்பதற்கு முன் வரதட்சணைக் கோரிக்கை தொடர்பாக கடுமையாக நடத்தப்பட்டார் என்பதை நிரூபிக்க தற்சார்பான ஆதாரங்கள் கிடைத்த போதிலும் அது ஆராயப்படாததால் , அத்தகைய அறிக்கைகள் போதுமானதாக இல்லை. மேலும், இறந்தவர் எழுதிய கடிதங்களின் வடிவத்தில் உள்ள ஆவண ஆதாரங்கள் அரசுத் தரப்பை ஆதரிக்கவில்லை. அரசுத்தரப்பு வரதட்சணைக் கோரிக்கையையோ அல்லது அவரது மரணத்திற்கு முன்னர் அத்தகைய கோரிக்கை எதுவும் எழுப்பப்பட்டது என்பதையோ நிரூபிக்கத் தவறிவிட்டது. இ.த.ச.,304-பி, பிரிவின் கீழ் குற்றத்தின் அடிப்படை ஆதாரங்கள் நிரூபிக்கப்படவில்லை. அரசு தரப்பு, சாட்சிய சட்டத்தின் படி பிரிவு 113-பி, கீழான ஆரம்ப ஊகத்தை கூட நிரூபிக்க தவறிவிட்டது. இதனால், மேல்முறையீட்டாளர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை நியாயமான சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க அரசுத் தரப்பு தவறிவிட்டது. மேல்முறையீட்டு மனுதாரரின் தண்டனை ரத்து செய்யப்பட்டது - சாட்சிய சட்டம் , 1872- பிரிவு 113 – பி

மேல்முறையீட்டை அனுமதித்து நீதிமன்றம் முடிவு செய்ததாவது

1.1. தற்போதைய வழக்கில் அரசுத் தரப்பு, கீழமை நீதிமன்றங்களால் தண்டிக்கப்பட்டதற்கு அடிப்படையாக அமைந்த அ.சா.3 மற்றும் இறந்தவரின் சகோதரரான அ .சா.4 இன் வாக்குமூலத்தை நம்பியிருந்தது. இருப்பினும், இறந்தவர் இறப்பதற்கு முன் வரதட்சணைக் கோரிக்கை தொடர்பாக கடுமையாக நடத்தப்பட்டார் என்பதை நிரூபிக்க தற்சார்பான ஆதாரங்கள் கிடைத்த போதிலும் அது ஆராயப்படாததால் , அத்தகைய அறிக்கைகள் போதுமானதாக இல்லை. ஒரு உத்தரவுக் கடிதமான 25.01.1992 தேதியிட்ட அரசு தரப்பு சான்றாவணம் E/1 நம்பப்பட்டது மற்றும் இறந்தவரின் மாமனார் மாமியாரால் பஞ்சாயத்து

உறுப்பினர்களின் முன்னிலையில் செயல்படுத்தப்பட்டது. ஆனால் தீர்வு எட்டப்பட்டதை நிரூபிக்க, பஞ்சாயத்து உறுப்பினர்கள் எவரையும் விசாரிக்கவில்லை . எனவே, அரசுத் தரப்பு தாக்கல் செய்யும் கடிதங்களைக் கருத்தில் கொண்டு வாய்மொழி அறிக்கைகளை நம்ப முடியாது. இறந்தவர் தனது தந்தைக்கு எழுதிய கடிதமான அரசு தரப்பு சான்றாவணம் F /1 ஐ அரசு தரப்பு நம்பியுள்ளது. இறந்தவரின் தந்தையை அவரது மாமனார், மாமியார் வெறுக்கவும் சந்தேகிக்கவும் தொடங்கியுள்ளனர், எனவே அவர் தங்கச் சங்கிலியை அவர்களுக்கு வழங்காமல் பணத்தை மட்டுமே கொடுக்க வேண்டும் என்று கடிதம் எழுதப்பட்டுள்ளது. அத்தகைய கடிதம் மேல்முறையீட்டாளரால் எதுவும் கோரப்பட்டதாகக் காட்டவில்லை. அத்தகைய கடிதத்தை அனுப்பிய தேதியை அரசு தரப்பு நிரூபிக்கவில்லை எனவே, அத்தகைய கடிதம் அவரது மரணத்திற்கு முன்னர் எழுதப்பட்டது என்று கூற முடியாது. அதேபோன்று, அரசுத்தரப்பால் தாக்கல் செய்யப்பட்ட மற்றொரு கடிதம் அரசு தரப்பு சான்றாவணம்.K/1 ஆகும், இது இறந்தவர் தனது மாமியார் மற்றும் அண்ணியுடன் தனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்றும், ஆனால் அவரது கணவர் தினமும் அவளை அடிப்பதாகவும் கூறி தனது மைத்துனருக்கு (சகோதரி-கணவருக்கு) எழுதிய கடிதம் ஆகும். இந்த கடிதத்தின் தேதி நிரூபிக்கப்படவில்லை. மேலும், இறந்தவரின் கணவர் வரதட்சணை கோருவதற்கு அத்தகைய கடிதம் எந்த அனுமானத்திற்கும் வழிவகுக்கவில்லை. மேலும், அரசுத் தரப்பால் சார்வுறப்பட்ட கூடுதல் கடிதமான 25.01.1992 தேதியிட்ட அரசு தரப்பு சான்றாவணம் G/1 இல், இறந்தவர் தான் மகிழ்ச்சியாக இல்லை என்றும் , அவள் சமைத்த உணவை அவளது மாமியார் விரும்புவதில்லை என்றும் அந்த அளவுக்கு அவள் தனது மாமனார் மாமியாரால் துன்புறுத்தப்பட்டதாகவும் எழுதியுள்ளார். மீண்டும், அத்தகைய கடிதத்திலும் வரதட்சணைக் கோரிக்கை இருப்பதாக எந்த முடிவும் இல்லை. எனவே, இறந்தவர் எழுதிய கடிதங்களின்

வடிவத்தில் உள்ள ஆவண ஆதாரங்கள் அரசுத் தரப்பை ஆதரிக்கவில்லை. (பத்திகள் 14,15) [595- E-G 596 A-C].

1. 2 அரசுத் தரப்பு, வரதட்சணைக் கோரிக்கையையோ அல்லது அவள் இறப்பதற்கு முன்பு எழுப்பப்பட்ட அத்தகைய கோரிக்கையையோ நிரூபிக்க தவறிவிட்டது. எனவே, இ.த.ச., பிரிவு 304-பி இன் கீழ் குற்றத்தின் அடிப்படை ஆதாரங்கள் நிரூபிக்கப்படவில்லை. அரசு தரப்பு, சாட்சிய சட்டத்தின் படி பிரிவு 113-B கீழான ஆரம்ப ஊகத்தை கூட நிரூபிக்க தவறிவிட்டது. மேல்முறையீட்டாளர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை நியாயமான சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க அரசுத் தரப்பு தவறிவிட்டது. இதன் விளைவாக, மேல்முறையீட்டாளரின் தண்டனைத் தீர்ப்பு ரத்து செய்யப்படுகிறது மற்றும் அவர் வேறு எந்த வழக்குகளிலும் சம்மந்தப்படாதவரை அவர் விடுதலை செய்யப்படுகிறார். (பத்திகள் 16,17) [596 D- F].

சத்விர் சிங் மற்றும் பலர் -எதிர் -பஞ்சாப் மாநில அரசு மற்றும் ஒருவர் (2001) 8 SCC 633 ; [2001] 3 suppl. SCR 353: ஹிரா லால் மற்றும் பலர் -எதிர்- தேசிய தலைநகரமான டெல்லி மாநில அரசு(2003) 8 SCC 80 ; சகாதார் சிங் மற்றும் பலர் -எதிர்- ஹரியானா மாநில அரசு (2004) 11 SCC 291 ; மேஜர் சிங் மற்றும் ஒருவர் எதிர் பஞ்சாப் மாநில அரசு (2015) 5 SCC 777 மீது சார்வுறப்பட்டன.

பார்வையிடப்பட்ட தீர் முடிவுகள்

[2001] 3 Suppl. SCR 353 பத்தி 10 மீது சார்வுறப்பட்டன.

[2003] 1 Suppl. SCR 734 பத்தி 11 மீது சார்வுறப்பட்டன.

(2004) 11 SCC 291 பத்தி 12 மீது சார்வுறப்பட்டன.

[2015] 5 SCR 777 பத்தி 13 மீது சார்வுறப்பட்டன.

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு : குற்றவியல் மேல்முறையீடு எண். 1042 / 2012

1996 ஆம் ஆண்டின் குற்றவியல் மேல்முறையீடு எண். 128-SB இல் சண்டிகரில் உள்ள பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றத்தின் 21.01.2009 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் உத்தரவில் இருந்து.

கோபுரதன் மேல்முறையீட்டாளருக்கான வழக்கறிஞர்.

சேகர் ராஜ் சர்மா , விஷ்வா பல் சிங் , எதிர் மேல்முறையீட்டாளருக்கான வழக்கறிஞர்கள்

நீதிமன்றத்தின் தீர்ப்பு **மாண்புமிகு நீதியரசர் திரு. ஹேமந்த் குப்தா** அவர்களால் வழங்கப்பட்டது.

1. இந்த மேல்முறையீடு , சண்டிகரில் உள்ள பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றம் வழங்கிய 21. 01. 2009 தேதியிட்ட தீர்ப்புக்கு எதிரானதாகும். இதன் மூலம் உயர்நீதிமன்றம், மேல்முறையீட்டாளரின் தாயார் சாவித்ரி தேவியின் மேல்முறையீட்டை அனுமதித்தும் 12.12.1995 அன்று விசாரணை நீதிமன்றத்தால் இ.த.ச., பிரிவு 304-பி, கீழ் புரிந்த தண்டனைக்குரிய குற்றத்திற்கான மேல்முறையீட்டாளரின் தண்டனையையும் உறுதி செய்துள்ளது. எனினும்,

மேல்முறையீட்டாளர் 15 ஆண்டுகளுக்கும் மேலாக நீண்ட விசாரணை நடைமுறையை அனுபவித்ததால், மேல்முறையீட்டாளரின் தண்டனையை 10 ஆண்டுகளில் இருந்து 7 ஆண்டுகளாக உயர் நீதிமன்றம் குறைத்துள்ளது.

2. அ .சா .9 ஆன விசாரணை அதிகாரி அசிம் கான் பதிவு செய்த படி, இறந்தவரின் தந்தையான சோஹன் லால்- அ .சா .3 / புகார்தாரரின் அறிக்கையின் படி அரசுத்தரப்பு வழக்கை தொடர்ந்தது. 26.05.1991 அன்று, மகேஷ் குமார் இறந்த ஓம்வதியை திருமணம் செய்து கொண்டார் என்று புகார்தாரர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் திருமணத்திற்கு பிறகு அவரது கணவர் மகேஷ்குமார், மாமனார் ராஜ்பால், மாமியார் சாவித்திரி, நாத்தனார் கமலேஷ் ஆகியோர் வரதட்சணை கேட்டு அவரை கொடுமைப்படுத்தினார் . மேலும் புகார்தாரர் தனது சக்திக்கு மீறிய வரதட்சணையை கொடுத்ததாகவும், திருமணமாகி ஒரு வருடத்திற்கு பிறகும் குற்றம் சாட்டப்பட்டவருக்கு தங்கச் சங்கிலியைக் கொடுத்ததாகவும், ஆனால் அவர்கள் இன்னும் திருப்தி அடையவில்லை என்றும், அதனால் இறந்தவரை அடிப்பதாகவும் கூறுகிறார். இறந்தவர் அதைப் பற்றி புகார்தாரருக்கு ஒரு கடிதம் அனுப்பினார், அதன் பிறகு, புகார்தாரர் தனது மகள் வசிக்கும் கிராமத்திற்குச் சென்று, அவளையும் அவளது மாமனார் மாமியாரையும் சந்தித்து, அவரது சக்திக்கு மீறிய அவர்களது வரதட்சணைக் கோரிக்கையை தன்னால் பூர்த்தி செய்ய முடியவில்லை என்று தெரிவித்தும், அதனால் அவரது மகளை போதிய வரதட்சணை தராததால் துன்புறுத்தக்கூடாது என்றும் கேட்டுக் கொண்டார். அந்த நேரத்தில் இறந்தவரின் மாமனார் மாமியார் மன்னிப்பு கேட்டதாகவும், அவரது மாமனார் அதை எழுத்துப்பூர்வமாக செய்து முடித்ததாகவும் , ரக்ஷா பந்தன் அன்று அவரை பெற்றோர் வீட்டிற்கு அனுப்புவதாக உறுதியளித்ததாகவும் புகார்தாரர் குறிப்பிடுகிறார் . பின்னர், ரக்ஷா பந்தன் விழா முடிந்ததும், அவர் மேல்முறையீட்டாளருடன் அவரது திருமண வீட்டிற்கு திருப்பி அனுப்பப்பட்டார், அப்போது

புகார்தாரர் அவர்களுக்கு ரூ.1,000/- ரொக்கமாக கொடுத்தார். சுமார் பத்து மாதங்களுக்குப் பிறகு, மேல்முறையீடு செய்தவர் இறந்தவரை அவரது சகோதரர் ராஜ்பீரின் வீட்டில் விட்டுவிட்டு ரூ.5,000/- கேட்டார். மேலும், 03.02.1994 அன்று, இறந்தவரை தன்னுடன் அழைத்துச் செல்ல மேல்முறையீட்டாளர் வந்தபோது, புகார்தாரர், அவருக்கு ரூ.2,000/-ஐ செலுத்தியுள்ளார் என்று கோரப்பட்டுள்ளது, மீதமுள்ள தொகையை ஏற்பாடு செய்த பிறகு, விரைவில் செலுத்துவதாக புகார்தாரர் உறுதியளித்தார். அப்போது, இறந்தவர் , கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால், தனது மாமனார் மாமியார் தன்னை வாழ அனுமதிக்க மாட்டார் என்று அச்சம் தெரிவித்ததாகத் தெரிகிறது. 08.02.1994 அன்று, புகார்தாரருக்கு குர்கான் சிவில் மருத்துவமனையில் தனது மகள் இறந்துவிட்டதாகவும், குற்றம் சாட்டப்பட்டவர் விஷம் கொடுத்ததால் இது ஏற்பட்டதாகவும் தகவல் கிடைத்தது. இவ்வாறு 09.02.1994 அன்று, மேல்முறையீட்டாளர், இறந்தவரின் மாமனார் ராஜ்பால், மாமியார் திருமதி. சாவித்திரி மற்றும் நாத்தனார் கமலேஷ் ஆகியோர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது.

3. விசாரணை , அ .சா .9 ஆன விசாரணை அதிகாரி அசிம் கான் என்பவரால் நடத்தப்பட்டது மற்றும் நான்கு குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டனர். விசாரணை முடிந்த பிறகு, குர்கானில் உள்ள முதல் நிலை நீதித்துறை நடுவர் முன்பு ஒரு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது, அவர் வழக்கை விசாரணை நீதிமன்றத்திற்கு ஒப்படைத்தார். குற்றம் சாட்டப்பட்ட நான்கு பேர் மீதும் இ.த .ச ., பிரிவு 304-பி இன் கீழ் குற்றம் சாட்டப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் அனைவரும் குற்றமற்றவர்கள் என்று கூறி விசாரணையை கோரினர். அரசு தரப்பு மொத்தம் 10 சாட்சிகளிடம் விசாரணை நடத்தியது..

4. விசாரணை நீதிமன்றம், இறந்தவர் தொடர்ந்து துன்புறுத்தப்பட்டு கொடுமைக்கு ஆளானதை உறுதிப்படுத்த, இறந்தவரால் எழுதப்பட்ட கடிதங்கள் ,முறையீட்டாளர்களான அ சா .3 சோஹன் லால் மற்றும் இறந்தவரின் சகோதரர் அ .சா. 4 ஆன ராஜ்பீர் ஆகியோரின் வாய்மொழி ஆதாரங்கள் போதுமானது என்றும் எனவே இது வரதட்சணை மரணம் தொடர்பான வழக்கு என்று கூறி தீர்ப்பளித்தது.. விசாரணை நீதிமன்றம், அரசுத் தரப்பு தனது வழக்கை இறந்தவரின் கணவரான மேல்முறையீட்டாளர் / மகேஷ் குமார், இறந்தவரின் மாமியார் சாவித்ரி தேவி, ஆகியோருக்கு எதிராக மட்டுமே நிரூபித்துள்ளது என்ற முடிவுக்கு வந்தது, அதே சமயம் குற்றம் சாட்டப்பட்ட ராஜ்பால் மற்றும் கமலேஷ் தொடர்பான குறிப்பிட்ட செயல் பங்கு எதுவும் இல்லை என்பதால் , அவர்களை நிரபராதி என்று கருதி விடுதலை செய்தது .

5. விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவால் மனக்குறையுற்ற மகேஷ் குமார் மற்றும் சாவித்ரி தேவி ஆகியோர் அந்த உத்தரவை எதிர்த்து பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். உயர் நீதிமன்றம், சாவித்ரி தேவியை நிரபராதி என்று கருதி , அவரது மேல்முறையீட்டை அனுமதித்து அவரை குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவித்தது, அதே நேரத்தில் மேல்முறையீட்டாளர் மகேஷ் குமாரின் தண்டனையை ஏழு ஆண்டுகளாக குறைத்தது .

6. உயர் நீதிமன்ற தீர்ப்பால் அதிருப்தி அடைந்த மேல்முறையீட்டாளர் மகேஷ்குமார் இந்த நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளார்.

7.மேல்முறையீட்டாளர் சார்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் , இ.த .ச., பிரிவு 304-பி இன் முக்கிய கூறுகள் அரசுத் தரப்பால் நிரூபிக்கப்படவில்லை என்று வாதிட்டார் . அரசுத்தரப்பால்

தாக்கல் செய்யப்பட்ட கடிதங்கள் வரதட்சணைக் கோரிக்கை மற்றும் தங்கச் சங்கிலிக்கான கோரிக்கை தொடர்புடையவை அல்ல, மேலும், அரசுத் தரப்பு சமர்ப்பித்த கடிதங்கள் அவர் இறப்பதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டவை, எனவே, இது இறந்தவர் இறப்பதற்கு முன்பு எழுதப்பட்டது என்று கூற முடியாது. இறப்பதற்கு முன் மேல்முறையீட்டாளரின் குடும்பத்தினர் தரப்பில் வரதட்சணைக் கோரிக்கை இருந்ததற்கான எந்த ஆதாரமும் இல்லை. எனவே, 304-பி பிரிவின் கீழ் மேல்முறையீடு செய்தவர் மீது குற்றம் நிரூபிக்கப்படவில்லை.

8. அரசு தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் வாதிடுகையில், இறந்தவர் திருமணமான 7 ஆண்டுகளுக்குள் இறந்துவிட்டார் மற்றும் ஆர்கனோ பாஸ்பரஸ் பூச்சிக்கொல்லி காரணமாக இயற்கைக்கு மாறான மரணத்தை சந்தித்தார் என்பதில் எந்த சர்ச்சையும் இல்லை என்று வாதிட்டார் . வரதட்சணை காரணமாக திருமணத்திற்குப் பிறகு அவர் தொடர்ந்து கொடுமைக்கு ஆளானார் என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி நிறுவுவதற்கு பதிவு செய்யப்பட்ட ஆதாரங்கள் போதுமானவை என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

9. இந்த வழக்கு மற்றும் இ.த.ச., பிரிவு 304-பி இன் அவசியமான கூறுகள் தொடர்பாக எழும் முதல் மற்றும் முதன்மையான கேள்வி என்னவென்றால், இறந்தவரின் மரணத்திற்கும் வரதட்சணைக் கோரிக்கை தொடர்பாக அவர் அனுபவித்த கொடுமை அல்லது துன்புறுத்தலுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளதா என்பதுதான்.

பிரிவு 304-பி பின்வருமாறு படிக்கப்படுகிறது :

"304. B - வரதட்சணை மரணம் :

1) ஒரு பெண்ணின் மரணமானது அவளின் திருமணமான ஏழு வருடங்களுக்குள் ஏதாவது தீக்காயங்களினால் அல்லது உடல் ரீதியான காயத்தால் அல்லது சாதாரண சூழ்நிலைகளின் கீழ் இல்லாமல் வேறுவிதமாக விளைவிக்கப்பட்டிருந்தது , மற்றும் அது அவளது மரணத்திற்கு முன்னர் அண்மையில், வரதட்சணைக்கான ஏதாவதொரு கேட்டல் அல்லது அது சம்பந்தமாக அவளது கணவரால் அல்லது அவளது கணவரின் யாரேனும் ஒரு உறவினரால் , அப்பெண் கொடுமைக்கு அல்லது துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டார் என்று காட்டப்பட்டால் , அத்தகைய மரணம் " வரதட்சணை மரணம்" என்று அழைக்கப்பட வேண்டும் . மற்றும் அத்தகைய கணவர் அல்லது உறவினர்தான் அவளின் மரணத்தை விளைவித்து இருக்கிறார் என்பதற்கு நிகராகக் கொள்ளப்படவேண்டும் .

விளக்கம்:- இச்சட்ட உட்பிரிவின் நோக்கங்களுக்காக " வரதட்சணை " என்பது வரதட்சணை தடை சட்டம் , 1961(சட்டம் 28/1961) இன் சட்டப்பிரிவு 2 இல் கூறப்பட்டுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும்.

(2) எவரேனும் , வரதட்சணை மரணத்தைப் புரிந்தால், ஏழு வருடங்களுக்குக் குறைவில்லாத , ஆனால் ஆயுள் சிறைத்தண்டனை வரை நீட்டிக்கபடக்கூடிய ஒரு கால அளவிலான சிறைத்தண்டனையுடன் தண்டிக்கப்பட வேண்டும்

10. இந்நீதிமன்றம், **சத்வீர் சிங் மற்றும் பலர் -எதிர்- பஞ்சாப் மாநிலம் மற்றும் ஒருவர்** - என்ற வழக்கில் பிரிவு 304-பி-இல் 'அவளின் இறப்பிற்கு முன்' என்ற சொற்றொடர்களின் பயன்பாட்டின் முக்கியத்துவத்தையும் உட்பொருளையும் ஆராய்கையில், அது பின்வருமாறு தீர்மானித்துள்ளது:

"20. இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 304-பி-யின் கீழ் குற்றம் நடந்த வழக்கில், துன்புறுத்தல் அல்லது கொடுமை வரதட்சணைக் கோரிக்கையுடன் தொடர்புடையது என்பதை நிரூபிக்க வேண்டிய கடமையிலிருந்து அரசுத் தரப்பு தப்ப முடியாது, மேலும் அத்தகைய கொடுமை அல்லது துன்புறுத்தல் "இறப்பதற்கு முன்பே" ஏற்பட்டது. பிரிவு 304-பி இல் உள்ள "வரதட்சணை" என்ற வார்த்தையை வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961 இன் பிரிவு 2 இல் வரையறுக்கப்பட்டுள்ளபடி புரிந்து கொள்ள வேண்டும். அந்த வரையறை இவ்வாறு வாசிக்கப்படுகிறது. இந்தச் சட்டத்தில், 'வரதட்சணை' என்பது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கொடுக்க அல்லது ஒப்புக் கொள்ளப்பட்ட சொத்து அல்லது மதிப்புமிக்க பாதுகாப்பைக் குறிக்கிறது.

(a) திருமணம் செய்ய வேண்டிய ஒரு தரப்பினரால் மற்று ஒரு தரப்பினருக்கு

(b) ஒரு திருமணத்தில் இரு தரப்பினரின் பெற்றோரோல் அல்லது வேறு ஏதேனும் ஒரு நபரால் அல்லது வேறு எந்த நபருக்கும்

கூறப்பட்ட தரப்பினர்களின் திருமணம் தொடர்பாக திருமணத்திற்குப் பிறகு அல்லது அதற்கு முன்னர் அல்லது எந்த நேரத்திலும்; ஆனால் முஸ்லிம் தனிநபர் சட்டம் (ஷரீஅத்) பொருந்தக்கூடிய நபர்களின் விஷயத்தில் வரதட்சணை கொடுப்பவர் அல்லது மஹ்ர் சேர்க்கப்படவில்லை."

XXXXX XXXXX XXXX XXXX

22. பிரிவு 304-பி-யை பயன்படுத்த வேண்டும் என்றால், சில நேரங்களில் வரதட்சணைக் கோரிக்கையுடன் அந்தப் பெண்ணுக்கு துன்புறுத்தல் அல்லது கொடுமை ஏற்பட்டது மட்டும் போதாது. ஆனால் அது "அவள் இறப்பதற்கு முன்பே" நடந்திருக்க வேண்டும். மேற்கூறிய

சொற்றொடர், சந்தேகத்திற்கு இடமின்றி, ஒரு மாற்றத்திற்கு தயாராகும் திறன் கொண்டதாகும் மற்றும் அவள் இறப்பதற்கு உடனடியாக அல்லது அதற்கு சில நாட்களுக்குள் அல்லது அதற்கு சில வாரங்களுக்குள் ஒரு காலகட்டத்தைக் குறிக்கிறது. ஆனால் அவளது மரணத்தின் தொடர்புடைய அந்த வெளிப்பாடே சுட்டிக்காட்டப்படும் மையப்புள்ளி. அவள் இறப்பதற்கு முன்" என்ற வார்த்தைகளைப் பயன்படுத்துவதன் மூலம் அத்தகைய நேரத்தை வழங்குவதன் சட்ட நோக்கம், அவரது மரணம், எல்லா சாத்தியக்கூறுகளிலும், அத்தகைய கொடுமை அல்லது துன்புறுத்தலின் விளைவாக இருந்திருக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துவதாகும். எளிமையாகச் சொன்னால், அவரது மரணத்திற்கும் வரதட்சணை தொடர்பான துன்புறுத்தல் அல்லது கொடுமைக்கும் இடையே ஒரு தெளிவான தொடர்பு இருக்க வேண்டும். இத்தகைய துன்புறுத்தல் அல்லது கொடுமைக்கு உள்ளானதற்கும் அவரது மரணத்திற்கும் இடையிலான இடைவெளி அதிகமாக இருந்தால், அனைத்து சாத்தியக்கூறுகளிலும் துன்புறுத்தல் அல்லது கொடுமை அவரது மரணத்திற்கு உடனடி காரணமாக இருந்திருக்காது என்பதை நீதிமன்றம் அளவிடும் நிலையில் இருக்கும். எனவே, ஒவ்வொரு வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளின் பேரில், அந்த குறிப்பிட்ட வழக்கின் குறிப்பிட்ட கால இடைவெளி, அவளின் மரணத்திற்கு முன்பு என்ற கருத்திலிருந்து அதன் முடிச்சுகளை அவிழ்ப்பதற்கு போதுமானதா என்பதை நீதிமன்றம் முடிவு செய்ய வேண்டும்."

11. **ஹிரா லால் & பலர் - எதிர்- தேசிய தலைநகரமான டெல்லி மாநில அரசு** என்ற வழக்கில், பாதிக்கப்பட்டவர் இறப்பதற்கு முன் கொடுமை அல்லது துன்புறுத்தலுக்கு ஆளானார் என்பதற்கான ஆதாரங்கள் இருக்க வேண்டும் என்று இந்த நீதிமன்றம் கூறியது. சாதாரண சூழ்நிலையில் அல்லாமல் நிகழும் மரணத்தின் வரம்புக்குள் அதைக் கொண்டு வர,

இயற்கையான அல்லது தற்செயலான மரணத்திற்கான சாத்தியத்தை அரசுத் தரப்பு நிராகரிக்க வேண்டும். அது பின்வருமாறு தீர்வளிக்கப்பட்டது :

" 9. இறப்பதற்குச் சிறிது காலத்திற்கு முன்பு பாதிக்கப்பட்டவர் கொடுமைக்கு ஆளானார் அல்லது துன்புறுத்தப்பட்டார் என்பதைக் காட்டுவதற்கு சாட்சியங்கள் இருக்கவேண்டும் என்று சாட்சிய சட்டத்தின் பிரிவு 113-பி மற்றும் இ. த. ச., பிரிவு 304-பி இன் ஒருங்கிணைந்த வாசிப்பு காட்டுகிறது. சாதாரண சூழ்நிலையில் அல்லாமல் நிகழும் மரணத்தின் வரம்புக்குள் அதைக் கொண்டு வர, இயற்கையான அல்லது தற்செயலான மரணத்திற்கான சாத்தியத்தை அரசுத் தரப்பு நிராகரிக்க வேண்டும். சாட்சியச் சட்டத்தின் பிரிவு 113-பி மற்றும் பிரிவு 304-பி இ.த.ச., ஆகியவை ஏற்றுக் கொள்ளுப்படும் போது " விரைவில்" என்ற சொற்றொடர் மிகவும் பொருத்தமானது. அரசு தரப்பு, சம்பவத்திற்கு முன்னர் கொடுமை அல்லது துன்புறுத்தல் இருந்தது என்பதையும், அந்த விஷயத்தில் மட்டுமே அனுமானம் செயல்படுகிறது என்பதையும் காட்ட கடமைப்பட்டுள்ளது. இது தொடர்பான சாட்சியங்கள் அரசுத்தரப்பால் வழிநடத்தப்பட வேண்டும். விரைவில் என்பது ஓர் ஒப்பீட்டுச் சொல்லாகும். ஒவ்வொரு வழக்கின் சூழ்நிலைகளைப் பொறுத்தும் மற்றும் சம்பவத்திற்கு முன்னர் ஒரு காலகட்டம் என்னவாக இருக்கும் என்பது குறித்து எந்த தடையாணையும் அமைக்க முடியாது. எந்தவொரு குறிப்பிட்ட காலத்தையும் குறிப்பிடுவது ஆபத்தானது, மேலும் இது வரதட்சணை மரணம் குற்றத்தை நிரூபிப்பதற்கும், சாட்சிய சட்டத்தின் பிரிவு 113-பி இன் கீழ் ஒரு அனுமானத்தை எழுப்புவதற்கும் அந்தக் குற்றத்தைச் செய்வதற்கு குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் எவ்வளவு நெருக்கமாக இருந்தார் என்ற மதிப்பீட்டின் முக்கியத்துவத்தைக் கொண்டுவருகிறது. இ.த.ச., பிரிவு 304-பி மற்றும் சாட்சியச் சட்டத்தின் பிரிவு 113-பி ஆகியவற்றில் பயன்படுத்தப்பட்ட அவளின் மரணத்திற்கு முன்பு என்ற சொற்றொடர் அந்தக் குற்றத்தைச் செய்வதற்கு குற்றம் சாட்டப்பட்ட

ஒருவர் எவ்வளவு நெருக்கமாக இருந்தார் என்ற மதிப்பீட்டின் எண்ணத்துடன் உள்ளது. எந்தவொரு திட்டவட்டமான காலமும் குறிக்கப்படவில்லை மற்றும் "விரைவில்" என்ற சொற்றொடர் வரையறுக்கப்படவில்லை. சாட்சியச் சட்டத்தின் பிரிவு 114 இல் பயன்படுத்தப்பட்ட விரைவில் முன் என்ற கூற்றின் குறிப்பு பொருத்தமானது. "திருட்டு நடந்த உடனேயே, உடைமைகளை வைத்திருக்கும் மனிதன் ஒருவன் அவனது உடைமைகளுக்கு கணக்குக் காட்டாவிட்டால், நீதிமன்றம் அவனை திருடன் அல்லது பொருட்கள் திருடப்படும் என்று தெரிந்தும் பெற்றவன்" என கருதலாம் என்று அது கூறுகிறது. ஒவ்வொரு வழக்கின் உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளைப் பொறுத்து ,"விரைவில்" என்ற வார்த்தைக்குள் வரக்கூடிய காலகட்டத்தின் முடிவு நீதிமன்றங்களால் தீர்மானிக்கப்படுகிறது. இருப்பினும், "விரைவில்" என்ற சொற்றொடர் சம்பந்தப்பட்ட கொடுமை அல்லது துன்புறுத்தலுக்கும் கேள்விக்குரிய மரணத்திற்கும் இடையில் இடைவெளி அதிகமாக இருக்கக்கூடாது என்பதைக் குறிக்கிறது. வரதட்சணைக் கோரிக்கையை அடிப்படையாகக் கொண்ட கொடுமையின் விளைவுக்கும் சம்பந்தப்பட்ட மரணத்திற்கும் இடையே ஒரு நெருங்கிய மற்றும் நேரடி தொடர்பு இருக்க வேண்டும். கொடுமை என்று கூறப்படும் சம்பவம் காலப்போக்கில் தொலைந்து போய், சம்பந்தப்பட்ட பெண்ணின் மன சமநிலையை சீர்குலைக்காத அளவுக்கு பழையதாகிவிட்டால், அது எந்த விளைவையும் ஏற்படுத்தாது.

12. **சகாதர் சிங் மற்றும் பலர் எதிர் - ஹரியானா மாநிலம்** (2004) 11 SCC 291, இல், இறந்தவர் எழுதிய கடிதம், இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 304 பி இன் கீழ் ஒரு குற்றத்தை வெளிப்படுத்துகிறதா என்பதை நீதிமன்றம் ஆராய்ந்து வந்தது. அதில் தீர்மானித்ததாவது .

" 11. மேற்கண்ட பின்னணியில், மேல்முறையீட்டாளர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை நிறுவுவதற்காக அரசுத்தரப்பின் தலைமையிலான ஆதாரங்களை நாங்கள் இப்போது பரிசீலிப்போம். இந்த நடவடிக்கையில், இறந்தவர் தனது தாயாருக்கு எழுதிய கடிதத்தை முதலில்

ஆராய்வோம். இந்தக் கடிதத்தில் தேதி குறிப்பிடப்படவில்லை என்றாலும் , இது 20-5-1986 அன்று பதிவிடப்பட்டது என்பதில் எந்த சர்ச்சையும் இல்லை, இது தேவேந்தர் கவுர் மற்றும் குழந்தைகளின் மரணத்திற்கு வழிவகுத்த சம்பவத்திற்கு முந்தைய தேதியாக இருக்கும் என்பதை கவரில் காணப்பட்ட அஞ்சல் முத்திரையிலிருந்து தெளிவாகிறது. கடிதத்தின் உள்ளடக்கம் தனது தாயார், அவரது(மகளின்) மாமனார் மாமியார் வீட்டுக்குச் சென்றபோது என்ன நடந்தது என்பதை குறிப்பிடுகிறது; மேலும் அவரது மாமனார் மாமியார் வைத்த கோரிக்கையை தற்செயலாக கூட எங்கும் குறிப்பிடவில்லை. இது இறந்தவர் தனது மாமியார் மீதான அணுகுமுறையை மட்டுமே பிரதிபலிக்கிறது, மேலும் கடந்த வருகையின் போது தனது தாயை மாமியார் சரியாக நடத்தவில்லை என்ற உணர்வை அவர் அனுபவித்தார்...."

13. மேஜர் சிங் மற்றும் ஒருவர் -எதிர் - பஞ்சாப் மாநிலம் (2015) 5 SCC 201 என்ற வழக்கில், துன்புறுத்தல் குறித்து ஊராட்சி உறுப்பினர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதாக சாட்சியங்கள் அளிக்கப்பட்டபோதிலும் , தனிப்பட்ட சாட்சிகள் ஏதும் விசாரிக்கப்படவில்லை என்ற காரணத்திற்காக அரசுத் தரப்பின் வாதத்தை நீதிமன்றம் நம்பவில்லை.

14. தற்போதைய வழக்கில் அரசுத் தரப்பு, கீழமை நீதிமன்றங்களால் தண்டிக்கப்பட்டதற்கு அடிப்படையாக அமைந்த அ.சா.3 மற்றும் இறந்தவரின் சகோதரரான அ .சா.4 இன் வாக்குமூலத்தை நம்பியிருந்தது. இருப்பினும், இறந்தவர் இறப்பதற்கு முன் வரதட்சணைக் கோரிக்கை தொடர்பாக கடுமையாக நடத்தப்பட்டார் என்பதை நிரூபிக்க தற்சார்பான ஆதாரங்கள் கிடைத்த போதிலும் அது ஆராயப்படாததால் , அத்தகைய அறிக்கைகள் போதுமானதாக இல்லை. ஒரு உத்தரவுக் கடிதமான 25.01.1992 தேதியிட்ட அரசு தரப்பு சான்றாவணம் E/1 நம்பப்பட்டது மற்றும் இறந்தவரின் மாமனார் மாமியாரால் பஞ்சாயத்து

உறுப்பினர்களின் முன்னிலையில் செயல்படுத்தப்பட்டது. ஆனால் தீர்வு எட்டப்பட்டதை நிரூபிக்க, பஞ்சாயத்து உறுப்பினர்கள் எவரையும் விசாரிக்கவில்லை . எனவே, அரசுத் தரப்பு தாக்கல் செய்யும் கடிதங்களைக் கருத்தில் கொண்டு வாய்மொழி அறிக்கைகளை நம்ப முடியாது.

15. இறந்தவர் தனது தந்தைக்கு எழுதிய கடிதமான அரசு தரப்பு சான்றாவணம் F/1 ஐ அரசு தரப்பு நம்பியுள்ளது. இறந்தவரின் தந்தையை அவரது மாமனார், மாமியார் வெறுக்கவும் சந்தேகிக்கவும் தொடங்கியுள்ளனர், எனவே அவர் தங்கச் சங்கிலியை அவர்களுக்கு வழங்காமல் பணத்தை மட்டுமே கொடுக்க வேண்டும் என்று கடிதம் எழுதப்பட்டுள்ளது. அத்தகைய கடிதம் மனுதாரரால் எதுவும் கோரப்பட்டதாகக் காட்டவில்லை. அத்தகைய கடிதத்தை அனுப்பிய தேதியை அரசு தரப்பு நிரூபிக்கவில்லை எனவே, அத்தகைய கடிதம் அவரது மரணத்திற்கு முன்னர் எழுதப்பட்டது என்று கூற முடியாது. அதேபோன்று, அரசுத்தரப்பால் தாக்கல் செய்யப்பட்ட மற்றொரு கடிதம் அரசு தரப்பு சான்றாவணம்.K/1 ஆகும், இது இறந்தவர் தனது மாமியார் மற்றும் அண்ணியுடன் தனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்றும், ஆனால் அவரது கணவர் தினமும் அவளை அடிப்பதாகவும் கூறி தனது மைத்துனருக்கு (சகோதரி-கணவருக்கு) எழுதிய கடிதம் ஆகும். இந்த கடிதத்தின் தேதி நிரூபிக்கப்படவில்லை. மேலும், இறந்தவரின் கணவர் வரதட்சணை கோருவதற்கு அத்தகைய கடிதம் எந்த அனுமானத்திற்கும் வழிவகுக்கவில்லை. மேலும், அரசுத் தரப்பால் சார்வுறப்பட்ட கூடுதல் கடிதமான 25.01.1992 தேதியிட்ட அரசு தரப்பு சான்றாவணம் G/1 இல், இறந்தவர் தான் மகிழ்ச்சியாக இல்லை என்றும், அவள் சமைத்த உணவை அவளது மாமியார் விரும்புவதில்லை என்றும்அந்த அளவுக்கு தனது மாமனார் மாமியாரால் துன்புறுத்தப்பட்டதாகவும் எழுதியுள்ளார். மீண்டும், அத்தகைய கடிதத்திலும் வரதட்சணைக் கோரிக்கை இருப்பதாக எந்த முடிவும் இல்லை.

எனவே, இறந்தவர் எழுதிய கடிதங்களின் வடிவத்தில் உள்ள ஆவண ஆதாரங்கள் அரசுத் தரப்பை ஆதரிக்கவில்லை.

16. அரசுத் தரப்பு, வரதட்சணைக் கோரிக்கையையோ அல்லது அவள் இறப்பதற்கு முன்பு எழுப்பப்பட்டஅத்தகைய கோரிக்கையையோ நிரூபிக்க தவறிவிட்டது. எனவே, இ.த.ச., பிரிவு 304-பி இன் கீழ் குற்றத்தின் அடிப்படை ஆதாரங்கள் நிரூபிக்கப்படவில்லை. அரசு தரப்பு, சாட்சிய சட்டத்தின் படி பிரிவு 113-B கீழான ஆரம்ப ஊகத்தை கூட நிரூபிக்க தவறிவிட்டது.

17. மேல்முறையீட்டாளருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்க அரசுத்தரப்பு தவறிவிட்டதாக நாங்கள் காண்கிறோம். இதன் விளைவாக, தற்போதைய மேல்முறையீட்டை நாங்கள் அனுமதித்து, மேல்முறையீட்டாளரின் தண்டனையை ரத்து செய்து , அவர் வேறு எந்த வழக்கிலும் ஈடுபடாத வரையில் அவரை விடுதலை செய்கிறோம். பிணை பத்திரங்கள் விடுவிக்கப் படுகின்றன .

மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது .

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."